# சோ. தர்மன் தூர்வை நாவலில் மாடத்தி

**ச. பாண்டியம்மாள்**

**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,**

**தியாகராசர் கல்லூரி, மதுரை – 09.**

periyasamypandiyammal@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தூர்வை நாவலில் மாடத்தி தன் குடும்பத்தை நிர்வகிப்பதன் மூலம் அவளது ஆளுமையும், தன்னம்பிக்கையும் வெளிப்படுத்துவதாய் இந்த ஆய்வு அமைக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் எல்லோரிடத்திலும் எளிமையாகப் பழகக் கூடியவள். தன்னுடைய கணவனின் உயிரைக் காப்பாற்றுவதன் மூலம் குடும்பத் தலைவியின் பொறுப்பும், அன்பும் கொண்டு மதிப்பு மிக்கவளாக திகழ்கிறாள். குழந்தையைக் கவனிப்பதும் தண்டிப்பதும் அவளது தாயின் கடமையை வெளிப்படுத்துகிறது. கணவனுக்கு உதவியாக விதைப்பதும், அவளிடம் தாய் போல் பாசம் கொண்டிருப்பதும் என எல்லாமுமாக மாடத்தி விளங்குவதை நாவல் வழி வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

வாழ்க்கையின் பிரதிபலிப்பே இலக்கியமாகும். சங்க காலம் முதல் இக்காலம் வரை தோன்றியுள்ள இலக்கியங்களில் பெண் உயர்த்தப்படுவதாகவும் அல்லது ஆணாதிக்கச் சமுதாயத்தால் அவளது அறிவு முடக்கப்படுவதாகவும், பெண் விடுதலை, பெண்ணுரிமை பற்றியும், பெண்ணின் ஆளுமையையும் அவளது மன நிலையையும்

வேறொருவரின் கண்களின் மூலமே பார்ப்பதும், எடுத்துரைப்பதாகவும் உள்ளன. பெண் என்பவள் குடும்பம், கணவன், பிள்ளைகள் என்ற காரணிகளால் தன்னை அழுத்திக் கொண்டு வாழும் நிலையிலே படைக்கப்படுகிறாள். சோ. தர்மன் படைப்புகளில் ஒன்றான தூர்வை நாவலில் மாடத்தியின் பாத்திரப்படைப்பை ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

**மாடத்தி – நாடார்**

ஒருவர் மற்றவருடன் பழகுதல் என்பது எளிது. ஆனால் ஒரு சமூகத்தில் இருந்து இன்னொரு சமூகத்துடன் பழகுவது மிகவும் முக்கியம். மாடத்தி நாடாருடன் பழகுவதோடு கொடுக்கல், வாங்கலோடும் இருப்பதை **“யேல, குருசாமி. வண்டிய நிறுத்துடா, நாடாரு விசில் அடிக்குற மாதிரி சத்தங் கேக்கு,”** (தூ. நா. ப. 18) மூக்கணாங்கயிற்றைச் சுண்டியிழுத்து வண்டியை நிறுத்தினான் குருசாமி. குடிசைப் பக்கத்திலிருந்து தலைத் துண்டை வீசி சைகை காட்டினார். ராசையா நாடார் அவர் கையில் பெரிய ஓலைப் பட்டை நிறைய உருட்டாய் கட்டிய நுங்கும் இரண்டு குருத்தோலைகளும் வைத்தக் கொண்டு வேகமாய் ஓடி வந்தார். வண்டிக்குள்ளிருந்து மாடத்தி எட்டிப் பார்த்தாள். யாரு நாடாரா என்ன! மழையோட கொண்டு வராட்டா ஓடியா போகுது. நாடார் கொடுத்த நுங்கு பட்டையையும், குருத்தோலைகளையும் வாங்கி குருசாமியும் மாடத்தியும் வண்டிக்குள் வைத்தார்கள்.

ஒருவரைப் பார்த்தவுடன் தன் கையில் உள்ளதைக் கொடுக்கும் அளவிற்கு இருவருக்கும் உள்ள நட்புறவையும் பழக்கத்தையும் நாவல் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

**மாடத்தி – ஐயர்**

ஆண், பெண் இணைந்து வாழும் வாழ்க்கையில் ஒரு பால் ஆதிக்கமே மிகுமாயின் பிரிவெனும் பேரிடி ஆங்கு நிகழ்வதுண்டு. உரிய வேளையில் ஆதிக்கம் இடம் மாறி அமைந்தால் மட்டுமே இல்லறம் என்னும் கூட்டு ஒப்பந்த வாழ்க்கை பொருளுடையதாக அமைகிறது. இல்லறத்தில் உயர்வு, தாழ்வு என்பது இருபாலருக்கிடையே கிடையாது. இருக்கவும் கூடாது. **“தமிழ் இலக்கியத்தில் அக இலக்கியங்கள் புற இலக்கியங்கள் இரு வகையிலும் தலைமைப் பண்பும் ஆளுமைத்திறனும் ஆடவர் மகளிர் என்று வேறுபாடின்றி படைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம்”[1]** இதே போல் மாடத்தியும், மினுத்தானும் ஒற்றுமையாக இருப்பதையும் இந்நாவலில் காணலாம்.

குழந்தைக்கு ஜாதகம் பார்க்கத் தன் கணவனுடன் செல்லும் மாடத்தி **“கும்பிடுறஞ்சாமி வா மாடத்தி உள்ள வா, வாங்க என்ன இப்பிடி திடுதிப்பினு. வரனும் வரனும்னு நெனச்சு சொணங்கிக்கிட்ட போகுது, வேல வெட்டியும் கொறஞ்சபாடு இல்ல. இன்னக்கி நாளு நல்ல நாளா இருக்கேன்னு அப்படியே சாமியவுகள பாத்தாப்லேயும் இருக்கும். ஜாதகத்த வாங்கனாப்லயும் இருக்கும்னு”** நினைத்த மாடத்தி ஐயரை, வணங்கினாள். ஐயர் வரவேற்று, தன் மரியாதையைக் காட்டிய பின், மாடத்தி பேசத் தொடங்கினாள். மினுத்தான் அமைதியாய் இருக்க மகன் ஜாதகத்தைப் பார்த்து விட்டுச் செல்லலாம் என்று வந்தோம் என்றாள். இங்கு இடையில் மினுத்தானுக்கும் மாடத்திக்கும் ஐயருக்கும் தெளிவாக உறவு வெளிப்படுகிறது. மினுத்தான் அமைதியாக இருந்து, மாடத்தி ஐயரிடம் தெளிவாக பழகுவது அவளின் ஆளுமையையும் எதார்த்தப் பண்பையும் வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

**கணவனை கவனித்தல்**

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது இல்லறம். அவ்வில்லறத்திற்கு அச்சாணி போன்றவள் பெண். இல்லறத்தை வழிநடத்தும் மனைவி தன்னைக் காத்து தற்கொண்டார்ப் பேணி தகைசான்ற சொல்லைக் காத்துச் சோர்வில்லாதவளாக இருக்க வேண்டும். குடிப் புகழ் விருப்பமும் புகழ்புரிந்த இல்லமும் உருவாவது வளத்தக்காளாகிய அவளது பொறுப்புகளாகின்றன.

**“மழைதிளைக்கும் மாடம்ஆய் மாண்பமைந்த காப்பாய்**

**இழை விளக்கு நின்றிமைப்பின் என்ஆம்? – விழைதக்க**

**மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்**

**காண்டற்கு அரியதோர் காடு”[2] (நாலடி. பா. 361)**

உயர்ந்த மாளிகையாய் மிகப்பெரிய வீடிருந்தாலும் பெருமைக்குரிய மனைவி இல்லை என்றால் அது வீடாகாது. மாடத்தி தன் கணவனின் பெருமைக்குரிய மனைவியாக இருப்பதை, அவள் உற்ற துயரிலிருந்து விடுவிக்கச் செயல்படுவதிலிருந்து அறியலாம். மினுத்தானுக்குப் பிளவை பெறப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டான். நடுமுதுகில் நாரத்தாங்காய் தண்டி நாக்கைத் துருத்தியதைப் போல சதை எட்டிப் பார்த்தது. மினுத்தான் எந்திரிக்கிறது ரெண்டாம் பட்சம் தான் என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் மாடத்தி விடாமுயற்சியுடன் நேமிக்கம் போடாத கோயிலே இல்லை. (தூ. நா. ப. 34) எல்லாக் கோவில்களிலும் தன் கணவனுக்காக நேர்த்திக் கடன் போட்டதனால் எந்த சாமி புண்ணியமோ மூனுமாசம் கழித்து எழுந்து விட்டான். மினுத்தான் பிழைத்தது மறுபிறப்பு. மாடத்தி ஒரு மனைவியாகத் தன் கணவன் உயிரைக்

காப்பாற்றியதன் மூலம் மாடத்தியின் அன்பையும், குடும்பப் பொறுப்பையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

**மாடத்தியின் நேர்த்திக்கடன்**

இல்வாழ்க்கையாவது இருவரும் கூடி வாழ்தலின் சிறப்பு **“உலகில் வாழ்க்கை என்று குறிப்பிடுவதே, இல்வாழ்க்கையைக் குறிக்கும்.”**[3] என வ.சு.ப. மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். பொதுவாக இல்லறத்தின் மாண்பு ஆண், பெண் இருபாலரது ஒழுக்க நிலையைப் பொறுத்தே அமைந்துள்ளது. ஆதலின் பண்டைக் காலம் தொட்டே ஆண், பெண் உறவுமுறையில் சில வழிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் கொண்டு வந்தனர். மாடத்தியும் மினுத்தானும் இல்வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான உண்மையான அன்போடு இருந்தனர். கணவனுக்கு உடல்நிலை சரியில்லாத போது அவள் நேர்த்திக்கடன் செலுத்துவது அவளது அன்பினை வெளிப்படுத்துகிறது. மாடத்தி தன் இடது கையால் மிருகத்தின் முடியைக் கோதிவிட்டுக் கொண்டே விரதம் முடிப்பாள். சோதனைக்குப் போல் இலையில் கொஞ்சம் சோற்றை உழப்பி வைத்துவிட்டு போய்விடும். இலையின் ஓரமெல்லாம் நரகல்கள் ஒட்டியிருப்பதையும் சாப்பிடுவாள். முகம் சுளிக்க மாட்டாள். வித்தியாசம் பார்த்தால் தெய்வக் குற்றம். (தூ. நா. ப. 54) பெத்த பிள்ளைக்குக் கூட ஆரும் இப்படி வெரதம் இருக்க மாட்டாக மாடத்தி ஆளே சொடிஞ்சிட்டாளே. விரதம் விடுவது எளிதல்ல. இந்தக் காரியத்தை யாரும் செய்யமாட்டார்கள் என்று ஊரார் எண்ணும் அளவிற்கு அவள் செயல்பட்ட காரணத்தால் ஊர்சனம் அம்புட்டும் காலில் விழுந்து விபூதி வாங்கும். குழந்தையின் ஜாதகம் சரியில்லாமல் மினுத்தான் உடல்நிலை மோசமானது. குழந்தையின் உயிரையும், கணவனின் உயிரையும் காப்பாற்றுவதற்காக ஒரு தாய் எந்த துயரத்தையும், அனுபவிப்பாள் என்பதை இப்பகுதியில் உணர முடிகிறது. ஊரில்

உள்ள அனைத்துப் பேரும் காலில் விழுந்து விபூதி வாங்குவார்கள். மாடத்தி ஒரு தாயாகவும், தெய்வமாகவும் இருப்பதை நாவலாசிரியர் மூலம் வெளிக்கொணர முடிகிறது.

**தாயின் அன்பு**

உலகில் எவ்வளவு விலைக் கொடுத்தாலும் ஒரு தாயின் அன்பை வாங்க முடியாது. அத்தகைய தாயின் அன்பை,

**“கண்ணின் சிறந்த உறுப்பு இல்லை. கொண்டாளின்**

**துன்னிய கேளிர் பிறர் இல்லை. மக்களின்**

**ஒண்மைய வாய் சான்ற பொருள் இல்லை. ஈன்றாளின்**

**என்ன கடவுளும் இல”[4] (நான்மணி. பா. 54)**

என்னும் செய்யுள் சுட்டுகிறது. ஒருவனுக்குக் கண்ணைப் போலச் சிறந்த உறுப்பில்லை. இமைகளுக்குக் கணவனைப் போல நெருங்கிய உறவினர் வேறில்லை. பெற்றோருக்கு மக்களைப் போல ஒளியுள்ள பொருள்கள் வேறில்லை. குழந்தைகளுக்குத் தாயைப் போல கடவுள் வேறெதுமில்லை என்பதற்கேற்ப மாடத்தியும் இருக்கிறாள். சீனியம்மாளிடமிருந்து குழந்தையை ஆவலாய் வாங்கிக் கொண்டாள் மாடத்தி. என்னடி வயித்துக்குள்ள ஒன்னயும் காணும், பாலு, குடுத்தியா? இல்லியா? இப்பதான்க்கா எந்திரிச்சான். மாடத்தியக்காளுக்குப் புள்ள மேலே பிரியத்தப்பாரு. (தூ. நா. ப. 9) பெத்தவகூட தோத்துப் போவா என்று சொல்லும் அளவுக்கு சீனியம்மாளுக்கு பிறந்த குழந்தையைத் தன் குழந்தையாகவே நினைத்து வளர்த்து வந்தாள். பிறர் குழந்தையையும் கவனிக்கும் போது தாயின் அன்பையும் அரவணைப்பையும் மாடத்தியிடம் காண முடிகிறது.

**மாடத்தி விதைப்பு பற்றி பேசுதல்**

இல்லறத்தைச் சிறப்பிக்கும் தலைவியே வாழ்க்கைத் துணை நலம் எனப்படுவாள். இல், இல்லாள், மனைவி முதலிய பெயர்கள் அவர்கட்கே சிறப்பாக அமைந்திருத்தலை ஆராயின் அவர்கள் குடும்ப நிர்வாகத்தில் எவ்வளவு பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதை நம்மால் அறியமுடிகிறது. தலைவன் வரவுக்குத் தக்கபடி செலவு செய்யும் பண்பையும் பெற்றிருத்தல் அவசியம். இத்தகைய சிறப்பு குணமும், பண்பும் பெற்றவள் வாழ்க்கைத் துணைவியாவாள். **“இல்லறத்தின் பெருமையும், சிறுமையும் பெண்களைப் பொறுத்து அமையும் என்பதை அக்கால மக்கள் உணர்ந்திருத்தனர் என அறியலாம்.”**[5] இத்தகைய குணம் உடைய மாடத்தி தன் கணவனுக்கு விதைக்கும் போது உறுதுணையாக இருப்பதை; விதைப்பு மும்முரமாய் நடந்தது மினுத்தானும் குருசாமியும் இரட்டைக் கலப்பை பூட்ட மாடத்தியும் சீனியம்மாளும் பின்னாலேயே பட்டம் போடுகிறார்கள். மாடத்தி மறந்திராம நாலு வெள்ளரி வெதைய ஊண்டிட்டுபோடு, வரப்புல பீக்க வெத ஊண்டிரு, ஊட ஊட, சீனியரவெத வத்தலுக்காகும் என்ற மினுத்தானுக்கு வயலில் விதைக்கும் போது உறுதுணையாக அவள் இருப்பதையும், (தூ. நா. ப. 95) தன் வீட்டிற்குத் தேவையான காய்கறிகளை நானே விதை போடுவதன் மூலம் வீட்டிற்குத் தேவையானதைச் செய்வதையும் காண்பதன் மூலம் மாடத்தியின் இல்லறப் பண்பையும் சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனையும் உணர முடிகிறது.

**முடிவுரை**

குடும்ப அமைப்பு, சமூக அமைப்பு போன்றவற்றில் மகளிருக்கு முன்னுரிமை வழங்கினால் தான் சமூகம் நல்ல முறையில் மாற்றம் காணும் என்பதற்கு தூர்வை நாவலிலுள்ள மாடத்தியின் கதாபாத்திரம் சிறந்த முன்னுதாரணம். சமூகத்தில் நன்

மதிப்பைப் பெற குடும்பப் பெண்களுக்கு பணிவும், அன்பும் ஆளுமையும் அவசியத் தேவை என்பதைத் தனது படைப்பில் மூலம் வலியுறுத்துகிறார் நாவலாசிரியர். இல்லத்தில் தலைமைப் பொற்றுப்பேற்று செயல்படும் கணவன் மனைவி இருவரும் தங்களுடைய கடமைகளையும் பொறுப்புகளையும் உணர்ந்தும், சிக்கல்கள், பிரச்சனைகள் ஏற்படும் பொழுது விட்டுக்கொடுத்து வாழ்வதும் தான் வாழ்க்கையாகும். இதில் மாடத்திக்கு கல்வியறிவு இல்லையென்றாலும் பெண் ஒழுக்கத்திலும் பண்பாட்டிலும் மாட்சியை உடையவளாகத் திகழ்ந்தாள். அவளுடையப் பாத்திரப் படைப்பை உணர்ந்து செயல்பட்டால் சமுதாயம் மேம்படவும், நாடு நலம்பெறவும் முடியும்.

**தொகுப்புரை**

1. குழந்தைக்கு ஜாதகம் பார்க்கச் செல்லும் போது ஐயருக்கு வயலில் விளைந்த பொருட்களை கொடுப்பதன் மூலம் இவர்களின் உறவும் எதார்த்தமாய் பழகும் முறையையும் மாடத்தியின் கொடுக்கும் பண்பை அறியமுடிகிறது.

2. நாடார் தன் கையில் உள்ளதை மாடத்தியை பார்த்தவுடன் கொடுப்பதன் மூலம் மற்ற சமூகத்தினருடன் பேசும் போது எதார்த்தப் பண்பை வெளிக்கொணர முடிகிறது.

3. மாடத்தி நேர்த்திக்கடன் செலுத்தி மினுத்தானின் உயிரைக் காப்பாற்றுவதன் மூலம் கணவன் மேல் வைத்திருக்கும் அன்பு வெளிப்படுகிறது.

4. குழந்தையைக் கவனிப்பதன் மூலம் தாயின் அன்பும், மினுத்தானுக்கு வயலில் வேலை செய்யும் போது உதவுவதும், சமூகத்திலும் வெளிப்படும் குடும்பத்திலும் மாடத்தியின் ஆளுமையை உணர முடிகிறது.

5. மாடத்தியின் கதாபாத்திரம் மூலம் பெண்களின் முன்னேற்றத்தை நாவல் வழி அறியலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. தர்மன், சோ., தூர்வை, காலச்சுவடு பதிப்பகம், 669, கே.டி., சாலை, நாகர் கோவில் – 629 001. முதல் பதிப்பு 1996.

2. நயினார், சு., இலக்கியங்களில் மகளிர் ஆளுமை, பாலபாரதி பதிப்பகம், 1-6-819, ஆறுமுகம் காலனி, சாட்சியாபுரம், சிவகாசி (மேற்கு), விருதுநகர் – 626 124. முதற்பதிப்பு – மார்ச் 2014.

3. இராஜாராம், துரை. பதினெண்க் கீழ்க்கணக்கு தொகுதி 1, முல்லை நிலையம், 9, பாரதி நகர் முதல் தெரு, தி.நகர், சென்னை – 600 017. பதிப்பு – 1995. நாலடியார் பா. எண். 361.

4. மாணிக்கம், வ.சுப. தமிழ்க்காதல், தமிழ் நிலையம், 40, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017. முதற்பதிப்பு – 2007. ப.19.

5. உஷா, சு., அற இலக்கியச் சமுதாயம், நான்மணிக்கடிகை, வேலகம் வெளியீடு, 6 வீரபத்ரசாமி கோயில் தெரு, இலாசுப் பேட்டை, புதுச்சேரி 605 008. பதிப்பு - 2008. நான்மணி. பா. எண். 54.

6. இராஜாராம், துரை. பதினெண்க் கீழ்க்கணக்கு தொகுதி 1, முல்லை நிலையம், 9, பாரதி நகர் முதல் தெரு, தி.நகர், சென்னை – 600 017. பதிப்பு – 1995.